CNR NO:TNTH13-004207-2019

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.**
**முன்னிலை – திருமதி.G.K.வேலுமயில், M.L., MBA.,**
**நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.**
**2021 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 19–ம் நாள் வியாழக்கிழமை**
**D.V.No.15/2019**

பாண்டியம்மாள்,
க.பெ.சிவராம் .. மனுதாரர்

**// எதிர் //**

1) சிவராம்
2) லட்சுமி
3) பவுன்ராஜ்
4) செல்லம்மாள்
5) ராசம்மாள் .. எதிர்மனுதாரர்கள்

-oo0oo-

இவ்வழக்கு கடந்த 02.07.2019–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு , இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றிந்த வழக்கறிஞர் திரு .P. ஜெயராஜ் அவர்கள் ஆஜராகியும் , எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.பால்பாண்டியன் அவர்கள் ஆஜராகியும் , மேற்படி வழக்கில் எதிர்மனு உரை தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் 21.02.2020–ம் தேதி ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மனுதாரர் தரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களை பார்வையிட்டும் சாட்சியங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

**1) மனுவின் சுருக்கம் பின்வருமாறு:–**

இவ்வழக்கில் மனுதாரருக்கும் , 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 25.10.2019–ம் தேதி 1–ம் எதிர்மனுதாரரின் வீட்டில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றும், கடந்த 25.07.2010–ம் தேதியில் பானுப்பிரியா என்ற பெண் குழந்தை பிறந்தது என்றும், திருமணத்தின்போது, மனுதாரரின் பெற்றோர் 10 பவுன் நகைகளும், 1–ம்

எதிர்மனுதாரருக்கு ½ பவுன் மோதிரம், மற்றும் ரூ. 2000/– மதிப்புள்ள கைக்கடிகாரமும், ரூ.10,000/– ரொக்கமாகவும், ரூ.1,00,000/– வீட்டிற்குத் தேவையான பொருட்கள் வாங்குவதற்காகவும் கொடுத்ததாகவும் , ரூ. 5000/– எங்களின் எதிர்கால வாழ்க்கைக்காகவும் கொடுத்தார்கள் என்றும் , திருமணத்திற்கு பின்பு நானும் 1–ம் எதிர்மனுதாரரும் எதிர்மனுதாரர்களின் வீட்டில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தபோது எதிர்மனுதாரர்கள் அனைவரும் சேர்ந்து கொண்டு, மேற்படி 1–ம் எதிர்மனுதாரர் தொழில் செய்வதற்காக ரூ.1,00,000/–ம் அல்லது 20 பவுன் நகைகள் ஏதாவது என் பெற்றோரிடமிருந்து வாங்கி வரச்சொல்லி என்னை கட்டாயப்படுத்தினார்கள் என்றும் , எனது பெற்றோர் நகைகள் தயார் செய்ய தாமதமானதற்கு 1–ம் எதிர்மனுதாரர் பணம் வாங்கி வரும்வரை தாம்பத்தியம் கிடையாது என்று குடும்ப வாழ்க்கையை புறக்கணித்து வந்தார் என்றும், மேற்படி எங்கள் ஊரைச் சார்ந்த மெடிக்கல் கடை வைத்திருக்கும் அமிர்தராஜ் என்பவரின் துர்போதனையைக் கேட்டுக்கொண்டு எதிர்மனுதாரர்கள் என்னை 20 பவுன் நகைகள் என் பெற்றோரிடமிருந்து வாங்கி வரச்சொல்லி என்னை கட்டாயப்படுத்தியும், இல்லாவிடில் எனது குழந்தையைக் கொன்றுவிட்டு 1–ம் எதிர்மனுதாரருக்கு வேறு திருமணம் செய்து வைத்துவிடுவதாக மிரட்டியதாகவும் , மேற்படி திருமணத்திற்கு பின்பு படித்த ஆசிரியை பயிற்சிக்கான அனைத்து செலவுகளையும் எனது தாயாரின் தனிப்பட்ட பண உதவியால் மட்டுமே படித்ததாகவும், 1–ம் எதிர்மனுதாரர் தொழில் செய்யப்போவதாக சொல்லி கொஞ்சம் கொஞ்சமாக நகைகளை வாங்கி அடமானம் வைத்து வீண் செலவுகள் செய்துவிட்டதாகவும் , 1–ம் எதிர்மனுதாரர் தனக்குத் தெரியாமல் கூடம்மாள் என்பவரை சட்டத்திற்குப் புறம்பாக திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருவதாகவும் , 1–ம் எதிர்மனுதாரருக்கும் , கூடம்மாளுக்கும் 2 பெண் குழந்தைகள் உள்ளனர் என்றும் , 1–ம் எதிர்மனுதாரரின் முறைகேடான நடவடிக்கைகளைத் தெரிந்து கொண்டதால் அனுதினம் எதிர்மனுதாரர்கள் என்னை அடித்து வீண் பிரச்சனைகள் செய்து துன்புறுத்தி வந்தார்கள் என்றும், இது சம்மந்தமாக போடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து 20.11.2012–ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தற்போது எதிர்மனுதாரர்கள் விடுவிக்கப்பட்டு விட்டார்கள் என்றும், என் மீது பொய்யான வீண் பழியை சுமத்தி கடந்த 29.02.2012–ம் தேதி தேனி சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P.No. 35/2012 என விவாகரத்து

மனுதாக்கல் செய்ததாகவும், அம்மனுவில் தனது தரப்பில் எதிர்மனு உரைகள் தாக்கல் செய்யப்பட்டு, பின் இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவி கோரி இடை மனு I.A. No. 35/2017 எனத் தாக்கல் செய்து , முழு விசாரணைக்குப் பின்பு எனக்கு 1–ம் எதிர்மனுதாரர் மாதம் ரூ . 5,000/– இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவி செலுத்த உத்தரவிட்டு அனுமதிக்கப்பட்டது என்றும் , ஆனால் 1–ம் எதிர்மனுதாரர் வேண்டுமென்றே எத்தொகையும் செலுத்தி வைக்காமல் இருந்து கொண்டு வந்ததால் , கடந்த 27.06.2018–ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் , 1–ம் எதிர்மனுதாரர் தற்போது பட்டாசு நிறுவனத்தில் வேலைக்குச் சென்று மாதம் ரூ .20,000/– வரை சம்பாதித்தும், உள்ளூரில் ரூ. 10,00,000/– (ரூபாய் பத்து லட்சம் ) மதிப்புள்ள அசையாச் சொத்துக்கள் வைத்து அதன் மூலம் வருடத்திற்கு ரூ . 2,00,000/– வரை வருமானம் ஈட்டி வருகிறார் என்றும் , 1–ம் எதிர்மனுதாரர் தன்னையும் , தன் ஒரே பெண் குழந்தையையும் பராமரிக்காமல், எல்லாவிதத்திலும் புறக்கணித்து வந்தும், தற்போது வரை உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவச் செலவுகள் , இதர அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் இருந்து வருவதாகவும் , தனது குழந்தையின் படிப்புக்கான எந்தவொரு செலவையும் செய்யாமல் , தனது குழந்தைக்கு பள்ளியில் சேர்வதற்கான அத்தியாவசியச் சான்றிதழ்களான சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் ஆகியனவற்றைக் கூட பெற்றுத் தர மறுத்து எங்களின் குடும்ப அட்டையில் ஏற்கனவே இருந்த எனது மற்றும் எனது ஒரே பெண் குழந்தையின் பெயரையும் சட்டத்திற்குப் புறம்பாக நீக்கம் செய்து, மேற்படி கூடம்மாள் பெயரை சேர்த்து தனிக் குடித்தனம் செய்து வருகிறார் என்றும் , தான் தனது பெற்றோர்கள் மற்றும் அவர்கள் வழி உறவினர்களின் உதவிகளைப் பெற்று வாழ்ந்து வருவதாகவும் , தன்னை எதிர்மனுதாரர்கள் தாக்கி காயப்படுத்தியதால் முதுகு , இடுப்பு பகுதிகளில் பாதிக்கப்பட்டு , வேலைகளுக்குச் சென்று தன்னையும் , தன் ஒரே பெண் குழந்தையையும் பராமரித்து , படிக்க வைக்க இயலாத நிலையில் இருந்து வருவதாகவும் , எனவே, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005–ன் பிரிவுகள் 12, 17 முதல் 23–ன் படி இம்மனு முடியும் வரை இடைக்காலப் பொருளுதவியாக ரூ . 10,000/– ஐ தனக்கு வழங்கும்படி 1–ம் எதிர்மனுதாரருக்கு பிரிவு 23–ன் படி ஒரு தலைப்பட்ச உத்தரவு வழங்கும் படியும் , 1–ம் எதிர்மனுதாரர் வாழும் தேனி மாவட்டம் , தேவாரம்

பேரூராட்சியில் உள்ள மேற்படி வீட்டில் 1-ம் எதிர்மனுதாரருடன் தான் சேர்ந்து வசிப்பதற்கு குடியிருப்பு ஆணை வழங்கும்படிக்கும் , தனக்கு உணவு, உடை போன்ற அத்தியாவசியச் செலவுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ . 10,000/-ம், மருத்துவச் செலவுகளுக்கு ரூ. 3000/-ம் ஆக மொத்தம் ரூ. 13,000/-ஐ பண நிவாரணம் வாழ்க்கைப் பொருளுதவியாக ஒவ்வொரு ஆங்கில மாதம் 5-ம் தேதிக்குள் 1-ம் எதிர்மனுதாரர் வழங்கும்படிக்கும், 1-ம் எதிர்மனுதாரர் வசமுள்ள தனக்குச் சொந்தமான 10 பவுன் தங்க நகைகளையும், மற்றும் ரூ. 1,00,000/-ம் மதிப்புள்ள சீர்வரிசைப் பொருட்களையும் , ரூ. 15,000/-ம் ரொக்கப் பணத்தையும் மீட்டு தரும்படியும் , எதிர்மனுதாரர்கள் செய்து வரும் குடும்ப வன்முறைச் செயல்களால் தனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு நஷ்ட ஈடாக ரூ. 5,00,000/- ஐ எதிர்மனுதாரர்கள் செலுத்த உத்தரவு பிறப்பிக்கும்படியும் , எதிர்மனுதாரர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்து உத்தரவிட வேண்டியும் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் சமூக நல பாதுகாப்பு அலுவலரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கையில் 1-ம் எதிர்மனுதாரர் விசாரணைக்கு ஆஜர் ஆகி மேற்படி காவல் நிலையத்தில் சமர்ப்பித்த கடிதத்தில் 1-ம் எதிர்மனுதாரர் , மனுதாரரும், 1-ம் எதிர்மனுதாரரும் கருத்து வேறுபாட்டினால் பிரிந்து வாழ்ந்து வந்ததாகவும், 1-ம் எதிர்மனுதாரர், மனுதாரரை வரதட்சணை கேட்டு உடல் அளவிலும் , மனதளவிலும் கொடுமைப்படுத்தி மனுதாரரும் ரூ .20,000/-ம் வாங்கி 1-ம் எதிர்மனுதாரர் வசம் கொடுத்ததாகவும் , மேலும், மனுதாரர் ஆசிரியர் பயிற்சி பள்ளிக்கு படிக்க சென்றபோது 1-ம் எதிர்மனுதாரர் வேறு திருமணம் செய்து கொண்டதாகவும் , எனவே, மனுதாரருக்கு எதிர்மனுதாரர்களால் இடையூறு ஏற்படக்கூடாது என்று பாதுகாப்பு உத்தரவும், 10 பவுன் நகை மற்றும் 1 லட்சம் ரூபாய் சீர்வரிசை பொருட்களை எதிர்மனுதாரர்கள் திருப்பி கொடுக்க வேண்டும் என்றும் , மனுதாரர் தற்போது குடியிருக்கும் பட்டா எண் .1514, புலஎண் 1002/1 பி என்ற சொத்தை விற்கவோ , வில்லங்கப்படுத்தவோ கூடாது என்று உத்தரவிடவும் , இருப்பிடம், உணவு மற்றும் உடைக்கு ரூ .13,000/-மும், உணர்ச்சிக் கொந்தளிப்புக்காக ரூ .5 லட்சமும், மனுதாரர் வாங்க உரிமையுடையவர் என்று சமூக நல அலுவலரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி சங்கதிகளை பரிசீலித்து மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்தும்,

மனுதாரர் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 17–ன் கீழ் தங்கியிருக்கும் வீடு அமைந்துள்ள பட்டா எண் .1514, புல எண்.1002/1 பி என்ற சொத்தில் உள்ள வீட்டிலேயே மனுதாரர் தொடர்ந்து தங்கியிருக்க இருப்பிட உத்தரவும்,

பிரிவு 18–ன் கீழ் மேற்படி எதிர்மனுதாரர்கள் , மனுதாரரை எவ்விதத்திலும் தொந்தரவு செய்யக்கூடாது என்றும் , தொடர்ந்து மனதளவிலும் , உடல் அளவிலும் , வன்கொடுமைக்கு ஆளாக்கக்கூடாது என்றும், 10 பவுன் நகை மற்றும் 1 லட்சம் ரூபாய் சீர்வரிசை பொருட்களை எதிர்மனுதாரர்கள் திருப்பி கொடுக்க வேண்டும் என்றும்,

பிரிவு 19–ன் கீழ் பட்டா எண்.1514 புலஎண் 1002/1 பி என்ற சொத்தை விற்கவோ, வில்லங்கப்படுத்தவோ கூடாது என்று இருப்பிட உத்தரவும்,

மேலும் பிரிவு 20–ன் கீழ் மனுதாரருக்கு உணவு , உடை, மருத்துவ செலவிற்காக மாதம் ரூ.10,000/–ம் ஜீவனாம்சமாக வழங்கியும்,

மேற்படி மனுதாரருக்கு பிரிவு 22–ன் கீழ் ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பிற்கு ரூ.50,000/–ம் வழங்கியும்,

மேற்படி உணவு, உடை, மருத்துவ செலவிற்காக மாதம் ரூ.10,000/– ஜீவனாம்ச தொகையை இம்மனு தாக்கல் செய்த தேதியான 02.07.2019–ம் தேதியிலிருந்து உத்தரவு பிறப்பிக்கும் தேதி 19.08.2021–ம் தேதி வரையிலான மாதங்களுக்கு மேற்படி தொகை ரூ.13,000/–த்தை கணக்கிட்டு நிலுவைத்தொகையினை உத்தரவு தேதியிலிருந்து 6 மாதங்களுக்குள் மனுதாரருக்கு , 1–ம் எதிர்மனுதாரர் பிரதி ஆங்கில மாதம் 10–ம் தேதிக்குள் ஜீவனாம்சத் தொகையை செலுத்த வேண்டும் என்றும் , உணர்ச்சிக் கொந்தளிப்பிற்கு ஏற்பட்ட இழப்பீட்டை ரூ .50,000/–ஐ உத்தரவுப்பிறப்பித்த

தேதியிலிருந்து 3 மாதத்திற்குள் மனுதாரருக்கு அஞ்சல் மூலமாகவோ அல்லது வங்கி கணக்கு மூலமாகவோ அல்லது நேரிலோ 1–ம் எதிர்மனுதாரர் செலுத்தி வைக்கவேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிட்டும், முடிவாக மனு அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2021–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19–ம் நாள் வியாழக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)(திருமதி.G.K.வேலுமயில், M.L.,MBA.,)
நீதித்துறை நடுவர்,
போடிநாயக்கனூர்.

<u>இணைப்பு:</u>

<u>சாட்சிகளின் பட்டியல்</u>

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.1 | பாண்டியம்மாள் (புகார்தாரர்) |

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>-

1) 25.10.2009–ம் தேதியில் மனுதாரர் மற்றும் 1–ம் எதிர்மனுதாரர் ஆகியோர்களின் திருமண அழைப்பிதழ் அசல் ம.சா.ஆ.1 ஆகும்.

2) 25.10.2009–ம் தேதிய திருமணப் பதிவு ரசீது நகல் ம.சா.ஆ.2 ஆகும்.

3) மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) – ம.சா.ஆ.3.

4) 1–ம் எதிர்மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) – ம.சா.ஆ.4.

5) 05.10.2010–ம் தேதிய மனுதாரரின் ஒரே பெண் குழந்தை பானுபிரியா பிறப்பு சான்றிதழ் நகல். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) – ம.சா.ஆ.5.

6) 1–ம் எதிர்மனுதாரரின் குடும்ப அடையாள அட்டை (Smart Card) நகல். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) – ம.சா.ஆ.6.

7) 01.08.2017–ம் தேதிய மனுதாரரின் ஒரே பெண் குழந்தை பானுபிரியா பள்ளி மாற்றுச்சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) – ம.சா.ஆ.7.

8) 27.02.2013–ம் தேதிய 1–ம் எதிர்மனுதாரரின் 2–வது மனைவி மூலமாக பிறந்த சர்மிளாவின் பிறப்பு சான்றிதழ் நகல் – ம.சா.ஆ.8.

9) 20.06.2019–ம் தேதிய 1–ம் எதிர்மனுதாரர் மீது மனுதாரர் தேவாரம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் நகல் – ம.சா.ஆ.9.

10) 20.06.2019 மேற்படி புகாருக்கு தேவாரம் காவல் நிலையத்தில் கொடுத்த ஏற்பு மனு ரசீது நகல் ம.சா.ஆ.10,

11) 20.06.2019–ம் தேதிய மேற்படி புகார் விசாரணையில் தேவாரம் காவல்நிலையத்தில் 1–ம் எதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்த வாக்குமூலம் நகல் ம.சா.ஆ.11.

12) 01.07.2019–ம் தேதிய HMOP No.35/2012–ன் நிலை மற்றும் உத்தரவு இணையதள பதிவிறக்க அசல் ம.சா.ஆ.12.

13) 21.09.2005–ம் தேதிய 1–ம் எதிர்மனுதாரரின் பெயரில் கூட்டாக அசையாச் சொத்துக்குரிய பாகபாத்திய விடுதலைப் பத்திரம் அசல் ம.சா.ஆ,13,

14) 18.10.2020–ம் தேதிய 1–ம் எதிர்மனுதாரரின் இரண்டாவது மனைவியை குறிப்பிடும் திருமணப்பத்திரிக்கை அசல் ம.சா.ஆ.14.

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் இல்லை</u>

<u>எதிர் மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்- இல்லை</u>

(ஒம்)(திருமதி.G.K.வேலுமயில், M.L.,MBA.,)
நீதித்துறை நடுவர்,
போடிநாயக்கனூர்.